பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 04 2026 THURSDAY 6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்கள் தொகையில் **50** சதவீதமாக உள்ள பெண்களுக்கு நாட்டின் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் தலைவர் திரு விஜய் இன்று வெளியிட்டார்.

3. பெண்களுக்கு பாதுகாப்பை அளிக்க திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மூத்த தலைவர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

4. கடந்த தேர்தலில் திமுக கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

5. எகிப்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

---- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>>

மக்கள் தொகையில் 50 சதவீதமாக உள்ள பெண்களுக்கு நாட்டின் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்

மக்களவையில் இன்று நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் மகளிருக்கு இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் அரசியல் சாசன சட்டத்திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய பிரதமர், நாட்டின் வளர்ச்சியில் மகளிர் சக்தியின் ஆற்றல் மிக்க பங்களிப்பு அவசியமாகிறது என்று கூறினார்.

இந்த சிறப்பு மிக்க சட்டத்திருத்தத்திற்கு எவ்வித அரசியல் வண்ணமும் பூசாமல் நாட்டின் ஜனநாயகத்தையும், ஒட்டுமொத்த மக்கள் நலனையும் கருத்தில்கொண்டு எதிர்க்கட்சிகள் தங்களது முழு ஆதரவையும் அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த மசோதாவிற்கு தற்போது எதிர்ப்பு தெரிவித்தால், எதிர்காலத்தில் பாதகமான விளைவுகளை நாம் சந்திக்க நேரிடும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

உள்கட்டமைப்பு, ரயில்வே மற்றும் பொருளாதார காரணிகளை மட்டும் அடிப்படையாக கொண்டு வளர்ச்சியடைந்த இந்தியாவை மதிப்பிட முடியாது என்று கூறிய பிரதமர், அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு சம வாய்ப்பு அளிப்பட வேண்டியதும் வளர்ச்சிக்கான ஒரு காரணியாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

நாட்டிற்கான திட்டமிடலில் அனைவரின் பங்கேற்பிலும், அனைவருக்குமான வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தை பின்பற்ற வேண்டும் என்றும் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தில் ஊழல் அற்ற ஆட்சி உறுதி செய்யப்படும் என்று தவெக தலைவர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தமது கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு பேசிய அவர், அரசு ஊழியர்களுக்கு பழைய ஒய்வூதியத் திட்டம செயல்படுத்தப்படும் என்றும், போதைப்பொருளை தடுக்க கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்படும் என்றும் கூறினார்.

ஆண்டுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் 6 விலையில்லா சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படும், மகளிர்

உதவித்தொகை **2** ஆயிரத்து **500** ரூபாய் வழங்கப்படும் என்பன உள்ளிட்ட அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும் என்றும், **100** சதவீதம் பயிர் காப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குத்தகை விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு **10** ஆயிரம் ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படும் என்றும் திரு விஜய் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

பெண்களுக்கு பாதுகாப்பை அளிக்க திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மூத்த தலைவர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திருச்சியில் அக்கட்சியினர் இலவச கூப்பன் விநியோகித்தபோது, ஒரு பெண் அவமதிக்கப்பட்டு உயிரிழக்க நேரிட்டதாகவும் கூறினார்.

தொகுதி மறுவரையறைக்கு எதிராக அக்கட்சியினர் போராட்டம் நடத்துவது தேவையற்றது என்று அவர் கூறினார்.

பெண்களின் முன்னேற்றத்திற்கு எதிரான செயல்களுக்கே அக்கட்சி ஆதரவு அளித்து வருவதாகவும் திருமதி ரேகா குப்தா குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>>

கடந்த தேர்தலில் திமுக கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொகுதியில் தமது கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தமிழகத்தில் அக்கட்சி நிறைவேற்றிய திட்டங்களை பட்டியலிட்டார்.

மக்களின் தேவைகளை அறிந்து, அக்கட்சி திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

தங்களது கூட்டணிக்கு வலுசேர்க்கும் வகையில் வாக்களிக்குமாறு திரு செல்வப்பெருந்தகை கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

**இனி தேர்தல் களம்...**

**(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று

**இடம்பெறுகிறது மதுரை மாவட்டத்துக்கு உட்பட்ட மேலூர், மதுரை-கிழக்கு, சோழவந்தான், மதுரை-வடக்கு, மதுரை-தெற்கு தொகுதிகள்.**

***(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 201 mins.)***

<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

**திருவள்ளூர் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுவினர் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரங்கோலி கோலமிட்டு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தி உலக சாதனை படைத்தனர்.**

---------------

**தூத்துக்குடி மாவட்டத்தில் கூடுதலாக 11 மத்திய துணை ராணுவப்படையினர் தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு விஷ்ணு மகாஜன் கூறியுள்ளார்.**

------------------

**சேலம் மற்றும் கடலூர் மாவட்டங்களின் அனைத்துத் தொகுதிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில்**

வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னங்கள் பொருத்தும் பணி இன்று தொடங்கியது.

--------------

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி சார்பில் வீடுகளில் தேர்தல் வாசகங்களை ஒட்டி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

---------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பு இன்று நடைபெற்றது.

---------------

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி சென்னை மாவட்டத்தில் உள்ள மதுபானக் கடைகள் வரும் 21-ஆம் தேதிமுதல் 23-ஆம் தேதிவரை மூடப்படும் என்று சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி திரு குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

எகிப்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சகஜா எமளப்பள்ளி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-3 என்ற செட் கணக்கில், ரஷ்யாவின் **Sofia Martianova** -வை வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் கரண் சிங்கும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் மும்பை இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

-----------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி — பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>>**